# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
## பத்தாம் பத்து
## அடியார் வருத்தம் தீர்க்கும் எம்பெருமானை, உடம்பு முடிந்தவுடன் பெறும் பலமான அர்ச்சிராதிகதிக்குத் துணையாகக் கொள்ளுதல்

## முதல் திருவாய்மொழி - தாள தாமரை
### தன் திருவடிகளை அடைந்தார்க்குத் தானே துணையாகின்ற திருமோகூர்க் காளமேகப் பெருமாளை வழித் துணையாகக் கொண்டு, ஆழ்வார் தாம் பிறவித் துயர் ஒழிந்து பரமபதம் அடையக் கருதியதை அருளிச் செய்தல்

** தாள தாமரைத் * தடம் அணி வயல் திருமோகூர் *
நாளு மேவி நன்கமர்ந்து நின்று * அசுரரைத் தகர்க்கும் **
தோளு நான்கு உடைச் * சுரி குழல் கமலக் கண் கனி வாய் *
காளமேகத்தை அன்றி * மற்றொன்று இலம் கதியே 1

இலம் கதி மற்றொன்று எம்மைக்கும் * ஈன் தண்துழாயின் *
அலங்கல் அங்கண்ணி * ஆயிரம் பேர் உடை அம்மான் **
நலங்கொள் நான்மறை வாணர்கள் வாழ் * திருமோகூர் *
நலங்கழல் அவன் அடி நிழல் * தடம் அன்றி யாமே 2

அன்றி யாம் ஒரு புகல் இடம் * இலம் என்றென்று அலற்றி *
நின்று நான்முகன் அரனொடு * தேவர்கள் நாட **
வென்று இம்மூவுலகு அளித்து * உழல்வான் திருமோகூர் *
நன்று நாம் இனி நணுகுதும் * நமது இடர் கெடவே 3

இடர் கெட எம்மைப் போந்து அளியாய் * என்றென்று ஏத்தி *
சுடர் கொள் சோதியைத் * தேவரும் முனிவரும் தொடர **
படர் கொள் பாம்பணைப் * பள்ளி கொள்வான் திருமோகூர் *
இடர் கெட அடி பரவுதும் * தொண்டீர்! வம்மினே 4

தொண்டீர்! வம்மின் * நம் சுடர் ஒளி ஒரு தனி முதல்வன் *
அண்ட மூவுலகு அளந்தவன் * அணி திருமோகூர் **
எண்டிசையும் ஈன் கரும்பொடு * பெருஞ்செந்நெல் விளைய *
கொண்ட கோயிலை வலம் செய்து * இங்கு ஆடுதும் கூத்தே 5

கூத்தன் கோவலன் * குதற்று வல் அசுரர்கள் கூற்றம் *
ஏத்தும் நங்கட்கும் * அமரர்க்கும் முனிவர்க்கும் இன்பன் **
வாய்த்த தண் பணை வள வயல் சூழ் * திருமோகூர்
ஆத்தன் * தாமரை அடி அன்றி * மற்றிலம் அரணே 6

மற்றிலம் அரண் * வான் பெரும் பாழ் தனி முதலா *
சுற்றும் நீர் படைத்து * அதன் வழித் தொல் முனி முதலா **
முற்றும் தேவரோடு * உலகு செய்வான் திருமோகூர் *
சுற்றி நாம் வலம் செய்ய * நம் துயர் கெடும் கடிதே 7

துயர் கெடும் கடிது அடைந்து வந்து * அடியவர் தொழுமின் *
உயர் கொள் சோலை * ஒண் தட மணி ஒளி திருமோகூர் **
பெயர்கள் ஆயிரம் உடைய * வல் அரக்கர் புக்கு அழுந்த *
தயரதன் பெற்ற * மரதக மணித் தடத்தினையே 8

மணித் தடத்து அடி * மலர்க் கண்கள் பவளச் செவ்வாய் *
அணிக் கொள் நால் தடந்தோள் தெய்வம் * அசுரரை என்றும் **
துணிக்கும் வல் அரட்டன் * உறை பொழில் திருமோகூர் *
நணித்து நம்முடை நல் அரண் * நாம் அடைந்தனமே 9

நாம் அடைந்த நல் அரண் * நமக்கு என்று நல் அமரர் *
தீமை செய்யும் வல் அசுரரை * அஞ்சிச் சென்று அடைந்தால் **
காம ரூபம் கொண்டு * எழுந்து அளிப்பான் திருமோகூர் *
நாமமே நவின்று எண்ணுமின் * ஏத்துமின் நமர்காள்! 10

** ஏத்துமின் நமர்காள்! * என்று தான் குடம் ஆடு
கூத்தனை * குருகூர்ச் சடகோபன் * குற்றேவல்கள் **
வாய்த்த ஆயிரத்துள் இவை * வண் திருமோகூர்க்கு *
ஈத்த பத்து இவை ஏத்த வல்லார்க்கு * இடர் கெடுமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---